# மவுண்ட் றூயிட் தமிழ் கல்வி நிலையம்

## Mount Druitt Tamil Study Centre


Mobile: 0449 892 066

Email :mtdruitttsc@gmail.com Web : www.mtsc.org.au


பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

# பேச்சுப் போட்டி 2021

## ஆண்டு 7

எல்லாம் வல்ல இறையடி பணிந்து, ஏற்றம் தருகின்ற தமிழினை ஏற்று, ஆசிரியப் பெரியோரை அன்புடன் விரும்பி, நடுவர் பெருமக்களுக்கு சிரம்தனைத் தாழ்த்தி, அனைவருக்கும் என் அன்பான வணக்கம்.
எழுகதிர் தந்த புதிய நன்னாளில் என்னுரை சூடிய இனிய நல் மகுடம்

## விஞ்ஞானமும் மருத்துவமும்

ஆய்வுகள் செய்து, காரணம் கூறி, விளக்கங்கள் கொடுப்பது விஞ்ஞானம். மனிதன் நோய்கள் நீங்கி சுகமாய் வாழ வழிவகை செய்வது மருத்துவம். இந்த இரண்டுமே இணைந்து மனிதனைக் காப்பதே இன்றைய காலம். ஆதியில் மனிதனை நோய்கள் தாக்கிட, அதனால் கூட்டமாய் இறந்தே போயினர். காரணம் தெரியாது கலங்கி நின்றனர். தெய்வக்குற்றம் என்றே நினைத்தனர். இயற்கையின் நியதி என்றும் எண்ணினர். இறைவனை வணங்கினர். சடங்குகள் செய்தனர். காரணம் தேடினர். கண்ணுக்குத் தெரியா நுண்ணிய உயிரிகள் நோய்கள் தருவதாய் விஞ்ஞானம் உரைத்தது. அதற்கு மருந்துகளும் கண்டது. விஞ்ஞான வழியில் மருத்துவம் தொடங்கியது. இன்று இதயம் மாற்றப்படுகிறது, சிகிச்சைகள் பல கதிர்களால் நடக்கின்றது. ஒரு சில உரைத்தேன். இன்னமும் உண்டு. மருத்துவம் நோக்கி விஞ்ஞானம் கண்டதும், விஞ்ஞானம் கண்டதை மருத்துவம் ஏற்றதும் ஏராளம் ஏராளம் என்று கூறி என்னுரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி

வணக்கம்



ஆக்கம்: ஆசிரியர் திருமதி. செல்வராஜி இரங்கநாதன்.

பேச்சுப் போட்டி எதிர்வரும் 29.05.2021 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.